<u>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை</u>

<u>நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.32</u>

<u>2025, ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை</u>

<u>சித்திரை 12, திருவள்ளுவர் ஆண்டு – 2056</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது."**

(தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும், அது உலகத்தைவிடப் பெரிதாக மதிக்கப்படும்.)

1. <u>தகவல் கோரல்</u>

"கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், சில கிராமங்களில் மண்ணை வெட்டி எடுத்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து." திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் தகவல் கோரினார்கள்.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமளித்தார்கள்.

2. <u>அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு</u>

1. "மேட்டூர் அணையை பாசனத்திற்கு திறப்பதற்கு முன் சிறப்பு தூர்வாரும் பணிகளை முடிக்க வேண்டியது குறித்து." திரு. இரா. காமராஜ் அவர்கள் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளித்து பதிலுரை வழங்கினார்கள்.

2. "கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தொகுதி, புரவிப்பாளையம் ஊராட்சி, அம்பரம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் புதிதாகக் கட்டப்பட்ட குடிநீர் தொட்டிகளில் நீரேற்ற வேண்டியது குறித்து." முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளித்து பதிலுரை வழங்கினார்கள்.

3. <u>குழுவின் அறிக்கைகள் அளித்தல்</u>

<u>சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்</u>

**திரு. G.V. மார்க்கண்டேயன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்** அவர்கள் 2024–2026–ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் பதினேழாவது முதல் பத்தொன்பதாவது வரையிலான (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை பேரவைக்கு அளித்தார்.

4. <u>2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் – தொடர்ச்சி...</u>

2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோரால் 24.4.2025–ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற 2025–2026–ஆம் ஆண்டுக்கான கீழ்க்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரையும், வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள்.

24.4.2025–ஆம் நாளன்று மானியக் கோரிக்கை எண்.20 – உயர்கல்வித் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

24.4.2025–ஆம் நாளன்று மானியக் கோரிக்கை எண்.20 – உயர்கல்வித் துறையின் கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

24.4.2025–ஆம் நாளன்று மானியக் கோரிக்கை எண்.43 – பள்ளிக் கல்வித் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

24.4.2025–ஆம் நாளன்று மானியக் கோரிக்கை எண்.43 – பள்ளிக் கல்வித் துறையின் கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.31 – தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை</u>

"தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக் கோரிக்கை எண்.31–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.130,23,95,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

1. திரு. R. ராதாகிருஷ்ணன்
2. திரு. க. அசோகன்
3. திரு. JMH. அசன் மௌலானா
4. திரு. இராம. கருமாணிக்கம்
5. திரு. தி. ராமச்சந்திரன்
6. திரு. செ. ராஜேஷ் குமார்
7. திரு. துரை. சந்திரசேகர்
8. திரு. ஆர். கணேஷ்
9. திரு. எஸ். சதாசிவம்
10. திரு. இரா. அருள்
11. திரு. ஜி.கே. மணி
12. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
13. திரு. கி. அசோக்குமார்
14. திரு. கே.பி. முனுசாமி
15. திரு. ஓ.எஸ். மணியன்
16. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
17. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
18. திரு. மு. ஜெகன்மூர்த்தி
19. திருமதி வானதி சீனிவாசன்
20. திரு. ட்டி. இராமச்சந்திரன்
21. திரு. ஆர்.பி. உதயகுமார்
22. திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
23. திரு. ஆ. அருண்மொழிதேவன்
24. திரு. அம்மன் K. அர்ச்சுணன்
25. திரு. கே.ஆர். ஜெயராம்
26. திரு. செ. சுந்தரராஜன்
27. திரு. ஆ.மு. முனிரத்தினம்
28. திரு. செ. கிருஷ்ணமுரளி
29. திருமதி கு. மரகதம் குமரவேல்
30. திரு. பி. அய்யப்பன்

..3

31. திரு. ஆ. கோவிந்தசாமி
32. முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
33. திரு. P.R.G. அருண்குமார்
34. திரு. V.P. கந்தசாமி
35. திரு. நயினார் நாகேந்திரன்
36. திரு. S. ஜெயக்குமார்
37. திரு. A.K. செல்வராஜ்
38. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
39. திரு. வி.பி. நாகைமாலி
40. முனைவர் இசக்கி சுப்பையா
41. திரு. பொ. அர்ஜுனன்
42. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
43. திரு. கோ. செந்தில் குமார்
44. திரு. வே. சம்பத்குமார்
45. திரு. கே.பி. அன்பழகன்
46. திரு. இரா. காமராஜ்
47. முனைவர் (திருமதி) தாரகை கத்பட்
48. திரு. எஸ்.பி. வேலுமணி
49. திரு. மா. சின்னதுரை

<u>கோரிக்கை எண்.27 – தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை</u>

"தொழில், முதலீட் ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மானியக் கோரிக்கை எண்.27–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,195,67,54,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,037,94,43,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.681,00,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

1. திரு. R. ராதாகிருஷ்ணன்
2. திரு. க. அசோகன்
3. திரு. JMH. அசன் மௌலானா
4. திரு. இராம. கருமாணிக்கம்
5. திரு. ஆ.மு. முனிரத்தினம்
6. திரு. தி. ராமச்சந்திரன்
7. திரு. S. ராஜகுமார்
8. திரு. செ. ராஜேஷ் குமார்
9. திரு. ஆர். கணேஷ்
10. திரு. எஸ். சதாசிவம்
11. திரு. இரா. அருள்
12. திரு. ஜி.கே. மணி
13. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
14. திரு. கி. அசோக்குமார்
15. திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
16. திரு. ஓ.எஸ். மணியன்
17. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
18. திரு. மு. ஜெகன்மூர்த்தி
19. திருமதி வானதி சீனிவாசன்
20. திரு. S.S. பாலாஜி
21. திரு. ட்டி. இராமச்சந்திரன்
22. திரு. ஆர்.பி. உதயகுமார்
23. திரு. ஆ. அருண்மொழிதேவன்
24. திரு. கே.ஆர். ஜெயராம்
25. திரு. செ. சுந்தரராஜன்
26. திரு. செ. கிருஷ்ணமுரளி
27. திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்
28. திருமதி கு. மரகதம் குமரவேல்
29. முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
30. திரு. P.R.G. அருண்குமார்
31. திரு. கே.பி. முனுசாமி
32. திரு. செல்லூர் கே. ராஜு
33. திரு. V.P. கந்தசாமி
34. திரு. K.N. விஜயகுமார்
35. திரு. நயினார் நாகேந்திரன்
36. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
37. திரு. வி.பி. நாகைமாலி
38. முனைவர் இசக்கி சுப்பையா
39. திரு. மு. சக்ரபாணி
40. திரு. பொ. அர்ஜுனன்
41. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
42. திரு. சு. ரவி
43. திரு. K. மாரிமுத்து
44. திரு. கோ. செந்தில் குமார்
45. திரு. கே.பி. அன்பழகன்
46. திரு. வே. சம்பத்குமார்
47. திரு. பொன். ஜெயசீலன்
48. திரு. மா. செந்தில்குமார்
49. முனைவர் (திருமதி) தாரகை கத்பட்
50. திரு. மா. சின்னதுரை

..4

மேற்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்தில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்:–

1. திரு. V.P. கந்தசாமி

5. <u>பேரவைக்கு ஓர் அறிவிப்பு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமிக்க நமது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நிகழ்வுகள் குறித்த பதிவுகளைக் கணினிமயமாக்கம் செய்வது தொடர்பாக, சட்டமன்றப் பேரவையில் 13–8–2021 அன்று அளிக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கையில் 1921 ஆம் ஆண்டு முதல் சட்டமன்றப் பேரவை மற்றும் சட்ட மேலவை நிகழ்வுகள் குறித்த பதிவுகள் மற்றும் ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தற்போது முதற்கட்டமாக, 1952 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, அதற்கென வடிவமைக்கப்பட்ட 'tnlasdigital.tn.gov.in' இணையதளத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வகையில் பதிவேற்றம் செய்யப்பட்ட நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று, 25–4–2025 பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டது என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1952 ஆம் ஆண்டு முதல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள சட்டமன்றக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் உள்ளிட்ட விவரங்களை தேடுதல் உள்ளிட்ட கூடுதல் வசதிகளுடன் கூடிய 'tnlasdigital.tn.gov.in' இணையதளத்தைப் பயன்படுத்தி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்கள்.

4. <u>2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் – தொடர்ச்சி...</u>

2. திரு ஒ. ஜோதி
3. திரு. ரா. இளங்கோ
4. திரு. க. அசோகன்
5. டாக்டர் வை. முத்துராஜா
6 திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
7. திரு. கோ. செந்தில் குமார்

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள்.

மானியக் கோரிக்கை எண்.31 – தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.31 – தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.27 – தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.27 – தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

பேரவை பிற்பகல் 3.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் **திங்கள்** 26–ஆம் நாள் **சனிக்கிழமை** காலை 9.30 மணிக்குக் கூடும்.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**